




கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், ஓய்வூதிய குறை தீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலக நாஞ்சில் கூட்டரங்கில் இன்று (07.06.2016) நடைபெற்றது. இணை இயக்குநர் (ஓய்வூதியம்) திரு. ரவிச்சந்திரன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (கணக்கு) திரு. இலெட்சுமி நாராயணன், கணக்கு அலுவலர் திரு. மதிவாணன் ஆகியோர் உடனுள்ளனர்.

செ.வெ.எண்: 334/2016 நாள்: 07.06.2016

**பத்திரிக்கை செய்தி**

---

கன்னியாகுமரி மாவட்ட ஒய்வூதியர்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் 07.06.2016 முற்பகல் 10.30 மணிக்கு மாவட்ட ஆட்சியர் அலுவலக நாஞ்சில் கூட்ட அரங்கில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் திரு.சஜ்ஜன்சிங் ரா.சவான், இ.ஆ.ப., மாவட்ட ஆட்சியர், கன்னியாகுமரி மாவட்டம் அவர்கள் தலைமையேற்றும், இணை இயக்குநர் ஒய்வூதியர் நல இயக்கம், சென்னை திரு.C.ராமசந்திரன் அவர்களும், கணக்கு அலுவலர் திரு.K.மதிவாணன் அவர்களும், மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர்(கணக்கு) திரு.பா.இலெட்சுமி நாராயணன் மற்றும் அரசுதுறை அலுவலர்கள், ஒய்வூதியர்கள் கலந்து கொண்டனர்.

கூடுதல் தலைமை செயலாளர் மற்றும் நிதிதுறை செயலர் திரு.கே.சண்முகம், இ.ஆ.ப., மற்றும் நிதிதுறை செயலாளர் திரு.உதயசந்திரன், இ.ஆ.ப., அவர்களின் அறிவுரைகளின்படி ஒய்வூதியர்களுக்கு சேரவேண்டிய நிலுவை பணப்பலன்கள் அனைத்தும் மாவட்ட வாரியாக முறையான பயனாளிகள் கணக்கெடுத்து ஒய்வூதியத் துறை இயக்கக அலுவலர்கள் நேரடியாக சென்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் காசோலை வழங்க அனுமதிக்கப்பட்டது.

அதனடிப்படையில் இன்று ரூ.5,00,000/- க்கான 17 காசோலைகளை கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சஜ்ஜன்சிங் ரா. சவான், இ.ஆ.ப., அவர்களால் ஒய்வூதியதாரர்களுக்கு வழங்கப்பட்டது. தொடர்ந்து ஒய்வூதியர்களிடமிருந்து பெறப்பட்ட 76 விண்ணப்பங்களில் 62 விண்ணப்பங்களுக்கு தீர்வு காணப்பட்டது. 12 விண்ணப்பங்கள் தொடர்பாக துரித நடவடிக்கை மேற்கொள்ள சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டது. இக்கூட்டத்தில் விண்ணப்பித்த அனைத்து ஒய்வூதியர்களும் மற்றும் சம்பந்தப்பட்ட துறை சார்ந்த அலுவலர்களும் கலந்து கொண்டனர். மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் தொடர்பான நடவடிக்கைகளை "ஆ" பிரிவு தலைமை உதவியாளர் மற்றும் பணியாளர்களால் ஏற்பாடு செய்யப்பட்டது.

மாவட்ட ஆட்சித்தலைவருக்காக,
கன்னியாகுமரி மாவட்டம்

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.